ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2409/26 - 2024 නොවැම්බර් මස 06 වැනි බදාදා - 2024.11.06
2409/26 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 06 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பிரதேச செயலாளரின் குறிப்பு இல.: எபிரசெ/50/05/08.

காணி அமைச்சின் குறிப்பு இல.: LD/05/2003/SM/210.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

சப்பிரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி மாவட் டத்தில் எலபாத்த பிரதேச செயலகப் பிரிவில், நவதுன் கோரளையில், பல்லே பத்துவையில், கரங்கொட கிராம அலுவலர் பிரிவில், (இல. 186), கரங்கொட எனும் கிராமத்தில் அமைந்துள்ள திட்டப்பட இல. மு.கி.ப. 72, மேலதிக இல. 14, தாள் இல. 14 இன் 0.0179 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய நாகஹ கொரட்டுவ எனும் காணியின் விபரங்கள் பின்வருமாறு :

**01. துண்டு இல. 134 - உரிமை கோருபவர் : அரசு விஸ்தீரணம் : 0.0179 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு இல. 40; கிழக்கு : துண்டு இல. 40; தெற்கு : துண்டு இல. 40; மேற்கு : துண்டு இல. 40.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 27 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு எலபாத்த பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங் களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச்.எம். ஹேமந்த பண்டார,
பிரதேச செயலாளர்,
எலபாத்த.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
எலபாத்த,
2024, நவெம்பர் 01.

EOG 11 - 0042

1A - G 043026 — 09 (2024/11) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*